S.டேனியல் சம்பத் குமார்
எண் 147, திருநிலை காலனி,
விச்சூர் போஸ்ட்,
சென்னை–600 103




*for books contact :*

**S.DANIEL SAMPATH KUMAR**

*No. 147, Thirunilai colony ,*
*vichoor post , chennai - 600 103*
*E-Mail : sdanielsampathkumar@gmail.com*
*Website : danielendtimebooksministry.org*
*Phone No :* 99419 74213 , 96001 71260

TAMIL

# *The Spoken Word*

*by*

*WILLIAM MARRION BRANHAM*

# கால மணல்களின் மேலுள்ள அடிச்சுவடுகள்

**FOOTPRINTS ON THE SANDS OF TIME**

பாகம் 3

**ஏழாம் தூதன்**

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**"உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து"**

"அதை என்ன செய்தாய்?" என்று கேட்டான்.

"அதை நான் அங்கே போட்டு விட்டேன். அதோ அதன் தலை அங்கே கிடக்கிறது" என்று கூறினேன்.

அவன் அதனிடமாகப் போய், "அது செத்துவிட்டதா?" என்று கேட்டான்.

"நிச்சயமாக! அதன் தலையை அதன் சரீரத்திலிருந்து வெட்டி எறிந்து விட்டேன், அது மரித்துதான் இருக்க வேண்டும்" என்று நான் பதிலளித்தேன்.

எனவே, அப்பொழுது அவன் ஒரு குச்சியை எடுத்து, அந்த ஆமைத்தலையை மீண்டும் நதியில் போட்டுவிட எத்தனித்து, குச்சியை அதனருகில் கொண்டு சென்றான். அவ்வாறு அவன் செய்த பொழுது, அந்த ஆமை அக்குச்சியை கவ்வியது. இவ்வகை ஆமையானது, அதன் சரீரத்தினின்று தலையைப் பிய்த்து எறிந்து விட்டாலும், ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரத்திற்கு அது உயிரோடிருக்கும். என் தம்பி, செத்துப் போனதாக எண்ணப்பட்ட ஆமைத்தலையானது அக்குச்சியைக் கவ்வியதைக் கண்டதும், துள்ளிக்குதித்து, "ஹேய், இதென்ன அது செத்துவிட்டது என்று சொன்னாயே" என்று கத்தினான்.

"அது மரித்தே விட்டது" என்று நான் கூறினேன்.

"நல்லது, ஆமைக்கு தான் மரித்து விட்டது தெரிய வில்லையா" என்று பதிலளித்தான்.

அவ்விதமாகத்தான் அநேகர், தாங்கள் மரித்தவர்களா யிருந்தாலும் அதை அறிய மாட்டாதவர்களாயிருக்கிறார்கள்.

எபேசு சபையின் காலம், டிசம்பர் 5, 1960, பத்தி எண் 162–167

★★★★★

# கால மணல்களின் மேலுள்ள அடிச்சுவடுகள்

## FOOTPRINTS ON THE SANDS OF TIME

## பாகம் 3

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## பொருளடக்கம்:


1. இரவல் வாங்கின காகிதத்தில் நான் எழுதின செய்யுள்......3
2. தேவன் இல்லாமல் போயிருந்தால், நான் கொலைக்கார னாகியிருப்பேன்.................................................5
3. என் இருதயத்தில் ஏதோ ஒன்றுக்காக நான் பசியா யிருந்தேன்.......................................................9
4. மனமாற்றத்தின் போது, சிலுவையைப் போல் ஒளி தோன்றி ஒரு சத்தம் பேசுதல்.............................................13
5. நான் அந்நிய பாஷையில் பேசினேன்......................... 18
6. லவோதிக்கேயா சபை காலம் 1977–ல் முடியும் என்று முன்னறிவித்தல்.................................................. 20
7. அக்கினிஸ்தம்பம் வெளிப்படையாக தோன்றுதல்.........26
8. ஒரு குறைகூறுபவன் மேல் நியாத்தீர்ப்பு தாக்குதல்.......27
9. ஒரு பிசாசு துரத்தப்படுதல்.........................................29
10. மனைவியின் வளர்ப்புத் தந்தை உடனே மரித்துப்போதல்....................................................36
11. தேவனை தூஷித்த பெண் இரண்டு மணி நேரத்தில் மரித்தல்...............................................................37
12. மீன் பிடித்தலும் ஆமையும்........................................39




"அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள். அவள் பாவ விமோசன ஸ்தலத்தை அடைந்திருக்கிறாள். இரண்டு மணி நேரத்துக்கு முன்பு அவள் உம்முடைய சபையை கடந்து செல்லும் போது, நீர் கொண்டுள்ள அவ்விதமான மார்க்கத்தை எங்கள் பசு கொண்டிருந்தால், அதை அவள் கொன்று போடுவாள் என்று கூறினாள். அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள்" என்றார்.

நான், "இப்பொழுது காலதாமதமாகி விட்டது. அவள் வேறொரு இடத்துக்குப் போகும் வரை காத்திருக்காமல், இங்கேயே தன் ஆத்துமாவை கழுவி சுத்திகரித்திருக்க வேண்டும்" என்றேன். பாருங்கள்? அது உண்மை. ஓ, ஆமாம். நமது துன்ப நேரத்திலேயே அவரை நாம் தேடுகிறோம். ஜனங்கள், "தேவன் பேரில் எனக்கு விசுவாசமில்லை" என்று கூறக் கேட்டிருக்கிறேன். ஒருமுறை அவர்களுக்கு துன்பம் உண்டா கட்டும், அவர்கள் முதலாவது கூப்பிடுவது அவரையே.

இயேசுவின் பட்சம் சேர்ந்திருத்தல், ஜூன் 1, 1962 மாலை, பத்தி எண் 263–267

# மீன் பிடித்தலும் ஆமையும்

## *FISHING AND THE SNAPPING TURTLE*

நானும் எனது சகோதரனும் சிறுவர்களாயிருக்கையில், ஒரு சமயம், மீன் பிடித்துக் கொண்டிருந்தோம். நான் அப்பொழுது தூண்டிலில் ஒரு வயதான பெரிய ஆமையைப் பிடித்தேன். இந்த வகை ஆமை மிகுந்த வலுவுடன் தூண்டிலை இழுக்கக் கூடியது. எனவே அது என்னை ஏமாற்றிவிடாதபடி இருக்க, உடனே நான் தூண்டில் முள்ளைக் கவ்விய அதன் தலையைக் கிள்ளி ஆற்றுக் கரையில் எறிந்துவிட்டேன். என்னுடைய தம்பி அங்கே வந்து, "சற்று முன்னர் நீ எதைப் பிடித்தாய்?" என்று கேட்டான்.

நான், "ஒரு ஆமை" என்று கூறினேன்.

நடத்துவதற்காக அங்கு நின்று கொண்டிருந்தார். அந்த சமயத்தில் பிரசங்கிக்க அவர் அழைக்கப்படவில்லை. அவர் பாடலை தொடங்கி நடத்துவதற்காக வந்து கொண்டிருந்தார். நான் வெளியே சென்று, காரில் ஏறி, விரைவாக ஓட்டிச் சென்று அங்கு அடைந்தேன். நான் படிக்கட்டுகளில் ஏறிச் சென்று கொண்டிருந்த போது அவள் தன்னுடைய கடைசி மூச்சை விட்டாள். அவளுடைய குடல்களும், சிறுநீரகமும் இயங்கிக் கொண்டிருந்தன. அவர்கள் அவள் முகத்தை மூடிவிட்டனர். நீராவி அப்படி வந்துக் கொண்டிருந்தது. அங்கு நின்று கொண்டிருந்த வயோதிப நர்ஸ், "சகோ.பிரன்ஹாமே, அவள் உங்களுக்காக அவளின் கடைசி மூச்சை விட்டாள்" என்றாள். அவள் அதை நேராக்க முயன்றாள், ஆனால் அப்பொழுது மிகவும் காலதாமதமாகி விட்டது. ஒரே சமயத்தில் நீங்கள் அநேக பாவங்களைச் செய்யக் கூடும். அவள் ஒரு விதமான... அவளுடைய முகத்தில் ஆழமாக...

அவளுக்கு பொன்நிறமுள்ள தலைமயிர் இருந்தது – மிகவும் அழகான பெண். கத்தரிக்கப்பட்டிருந்த அவளுடைய தலைமயிர் கலைந்து புதரைப் போல் காணப்பட்டது. அவளுடைய பெரிய பழுப்பு நிற கண்கள் வெளியே தள்ளப்பட்டு பாதி மூடியிருந்தன. அவளுடைய முகத்தில் காணப்பட்ட சுருக்கங்கள், அவள் அதிகமாக வேதனைப்பட்டதன் காரணமாக, அவளுடைய முகம் முழுவதிலும் சிறு வீக்கங்கள் போல் எழுந்து நின்றன. அவளுடைய வாய் திறந்திருந்தது. நான் அவளிடம் நடந்து சென்று அவளை உற்று நோக்கினேன். அவளுடைய கணவன் அங்கு நின்று கொண்டிருந்தார். அவர், "பில்லி, நான் ஒரு கத்தோலிக்கன், அவள் பாவ விமோசன ஸ்தலத்திற்கு சென்றிருப்பதால், அவளுக்காக ஒரு ஜெபத்தை ஏறெடுங்கள்" என்றார்.

நான், "என்ன?" என்றேன்.



# இரவல் வாங்கின காகிதத்தில் நான் எழுதின செய்யுள்

## *WROTE POETRY ON BORROWED PAPER*

நான் இப்படி ஒரு செய்யுளை எழுதினேன். அது... அதை எழுதும்போது எனக்கு பன்னிரண்டு வயது மாத்திரமே என்பதை நினைத்துப் பாருங்கள். அன்று நான் மலைக்கணவாயைப் பார்த்து நின்று கொண்டு, சிங்கம் தன் குகை அறையில் உட்கார்ந்து கொண்டு கண்ணாடி ஜன்னல் வழியாக வெளியே பார்க்கும் என்று நினைத்துப் பார்த்தேன். அப்பொழுது நான் எழுதின ஒரு சிறு செய்யுள் எனக்கு ஞாபகம் வந்தது. நான் வீடு சென்று அதை கண்டெடுத்தேன். அது இவ்வாறு எழுதப்பட்டிருந்தது.

சற்று நினைத்துப் பாருங்கள், எப்படி தேவன்... தேவன் தான் ஊக்கம் அனைத்தும் அளிப்பவர் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? தேவனே பாடலை எழுத வேண்டும். தேவன் பாடல்களில் இருக்கிறார் என்பதை விசுவாசிக்கிறீர்களா? இயேசு அவ்வாறு கூறியுள்ளார். அவர் தாவீது எழுதின சங்கீதங்களைக் குறிப்பிட்டு, "தாவீது சங்கீதத்தில் இவ்வாறு கூறினான் என்று உங்களுக்குத் தெரியாதா?" என்றார்.

சிலுவை மரணத்தைப் பாருங்கள். தாவீது அதைக் குறித்து 22ம் சங்கீதத்தில் பாடினான். "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? என் எலும்புகளெல்லாம் கட்டு விட்டது. என் கைகளையும் கால்களையும் உருவக் குத்தினார்கள்" என்று. அது ஒரு பாடல். சங்கீதம் என்பது பாடல்.

நான் எழுதின இந்த செய்யுள் எவ்வாறு நிறைவேறினது என்பதைக் கவனியுங்கள். ஒரு சிறுவனாக அங்கு கடன் வாங்கின காகிதத்தில் நான் எழுதின இந்த செய்யுள்:

*ஓ, தென் மேற்கில் தூரத்தில் நான் தனிமையிலிருந்தேன்*

*அங்கு நிழல்கள் மலை சிகரத்தின் மேல் படர்ந்தன*

*நீல நிற மந்தார நேரத்தில் பதுங்கியுள்ள ஒரு ஓநாயை என்னால் காணமுடிகிறது.*

*மாடுகள் புல் மேயும் இடத்தில் ஒரு நரி ஊளையிடுவதை என்னால் கேட்க முடிகிறது,*

*அரிசோனாத் தொடரிலுள்ள தூரத்து காடாலினா மலைகளில்*

*மலைக் கணவாயில் எங்கோ ஒரு சிங்கம் சத்தமிடுவதை என்னால் கேட்க முடிகிறது.*

இதை எழுதி நாற்பது ஆண்டுகள் கழித்து அந்த மலைக் கணவாயில் நான் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, அந்த சிங்கம் என்னை முறைத்துப் பார்த்தது. ஓ, தேவனே, நதிக்கு அப்பால் எங்கோ ஒரு தேசம் உள்ளது. அது அங்கு இருக்கத்தான் வேண்டும். பாருங்கள்? அதைக்குறித்து அநேக சம்பவங்கள் உரைக்கின்றன. இவையனைத்தும் கட்டுக்கதையல்ல. அவை உண்மையானவை. அவை தத்ரூபமானவை. அங்கு நான் நித்திய காலமாக வாழ எதிர்பார்க்கும் மக்களுடன் இன்றிரவு இங்குள்ள தற்காக நான் மிக்க மகிழ்ச்சியுறுகிறேன். அங்கு வியாதியில்லை, மரணம் இல்லை, பிரிவினை இல்லை. பிரயாணம் செய்வதென்பது நமக்கு ஒரு எளிதான செயலாயிருக்கும்.

கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன்,
பெப்ருவரி 17, 1965, பத்தி எண் 32–36



# தேவனை தூஷித்த பெண் இரண்டு மணி நேரத்தில் மரித்தல்

## *WOMAN DIES TWO HOURS AFTER BLASPHEMING*

ஒரு ஸ்திரீ மரணத் தருவாயிலிருந்தாள், நான் படிக்கட்டுகளில் ஓடி ஏறினேன். நான் இங்கு பிரசங்கித்துக் கொண்டிருந்த போது, அங்குள்ள கதவண்டையில் ஒரு மனிதன் நின்று கொண்டு என்னை அழைத்தார். அவள் வெளியே நடந்து சென்று விட்டாள் அவள் இந்த தெருவில் வசித்து வந்தாள். அவளுக்கு ஒரு பசு இருந்தது. அவள், "பில்லி கடைபிடிக்கும் அவ்விதமான மார்க்கத்தை என் பசு கடைபிடித்தால், அதை நான் கொன்று போடுவேன்" என்றாள். அதை கூறின பிறகு ஒரு மணி நேரத்துக்குள் அவள் வியாதிப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள் – அழகான இளம் பெண். நான் அங்கு விரைவாகச் சென்றேன். அவளுடைய கணவர் கத்தோலிக்கர். அவர்கள் என்னை ஆளனுப்பி அழைத்திருந்தனர். அவள் மரித்துக் கொண்டிருந்தாள்... அவளுடைய கண்கள் வீங்கி விட்டன. அவள், "அவரைக் கூப்பிடுங்கள், அவரைக் கூப்பிடுங்கள்; அவரைக் கூப்பிடுங்கள்; அவரை வேகமாக, வேகமாக கூப்பிடுங்கள்" என்றாள்.

அவளுடைய சகோதரன் ஓடி வந்து கதவண்டையில் நின்று கொண்டு, காத்திருந்து, காத்திருந்து, எனக்கு சைகை காட்டிக் கொண்டிருந்தார். இந்த இடம் ஜனங்களால் நிறைந்திருந்தது. சற்று கழிந்து யாரோ ஒருவர் வந்து ஒரு குறிப்பை மேசையின் மேல் வைத்தார். "மருத்துவமனையில் ஒருத்தி மரித்துக் கொண்டிருக்கிறாள்" என்று எழுதப்பட்டிருந்தது. அது சகோ. க்ரிம் ஸ்நெல்லிங் என்று நினைக்கிறேன். அவரிடம், "நான் திரும்பி வரும் வரைக்கும் என் இடத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்றேன். அவர் பாடலை தொடங்கி

அம்மா போர்வையை உதறிப் பார்த்தார்கள். ஆனால் படுக்கையில் ஒன்றுமில்லை. அது என்ன? ஒரு பிசாசு அவளைவிட்டு வெளியேறினது. என்ன நேர்ந்தது? அவள் ஒரு வினாடி அங்கு நின்றாள். அவ்வளவுதான்.

இதுவரை சண்டையிடப்பட்டவைகளில் மிகப்பெரிய யுத்தம், மார்ச் 11, 1962, பத்தி எண் 248-285

# மனைவியின் வளர்ப்புத் தந்தை உடனே மரித்துப்போதல்

## *WIFE'S STEPFATHER DIES INSTANTLY*

அண்மையில் ஒருவர் இவ்வாறு கூறுவதைக் கேட்டேன்... அவர் ஒரு விதமான... அவர் ஹோப்பின் வளர்ப்பு தந்தை. அவரிடம் நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறித்து சொல்லிக் கொண்டிருந்தேன். அவர், "உன்னிடமுள்ள கூட்டத்தாரைத் தவிர வேறு யார் இதை நம்புவார்? இன்னார் இன்னார் இந்த பட்டினத்திலேயே மிகவும் மோசமான ஒரு வர்த்தகர் தாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டதாக என்னிடம் கூறட்டும், நான் நம்புவேன்" என்றார்.

நான், "நீங்கள் கவலைப்படவேண்டாம். அவர் ஒருக்காலும் அப்படி கூறமாட்டார்" என்றேன். அவர் தேவனற்றவராய் உடனே மரித்துப் போனார்.

நீங்கள் செய்வதைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். நீங்கள் பேசுவதைக் குறித்து ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு சுவிசேஷத்திற்கு தகுதியாயுள்ள வாழ்க்கை அவசியம். அது உண்மை!

உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாய் அமைந்துள்ளதா?, ஜூன் 30, 1963, பத்தி எண் 103-104



# தேவன் இல்லாமல் போயிருந்தால், நான் கொலைக்காரனாகியிருப்பேன்

## *"I'D A-BEEN A MURDERER" EXCEPT FOR GOD*

ஜெபத்தின் மூலமாய் உங்கள் சுபாவத்தை இனிமையாக்கிக் கொண்டு, பிறகு உங்கள் மனதில் தீர்மானித்துக் கொள்ளுங்கள்... எனக்குத் தொடக்கத்தில் இருந்த கோபத்தைப் போல இந்த கட்டிடத்திலுள்ள அதிகம் பேருக்கும் இருக்காது என்று எண்ணுகிறேன். ஓ, என் வாய் எப்பொழுதும் அடித்து கொதறப்பட்டது. என் ஆகாரத்தை நான் 'ஸ்ட்ரா' வழியாக உறிஞ்சி சாப்பிடுவது வழக்கம்.

என் தாயார், உங்களுக்குத் தெரிந்தபடி, பாதி சிகப்பு இந்தியர். என் தந்தை அயர்லாந்து நாட்டைச் சேர்ந்தவர், கென்டக்கியில் குடிபுகுந்த ஐரீஷ்காரர். இருவருக்குமே கோபம் அதிகம். எல்லா நேரங்களிலும் என் வாய் கொதறியிருந்தது; நான் தொடக்கத்தில் சிறுவனாயிருந்த போது, அவர்கள் என்னைத் தூக்கி, குத்தி கீழே வீழ்த்துவார்கள். நான் மறுபடியும் எழுந்திருப்பேன்; அவர்கள் மறுபடியும் குத்தி வீழ்த்தி, என்னால் எழுந்திருக்க முடியாத நிலை வரும் வரைக்கும் குத்தி வீழ்த்திக் கொண்டேயிருப்பார்கள். அது எப்பொழுதும் நடந்து வந்தது. என்னால் எழுந்திருக்க முடியும்போது, நான் எழுந்திருப்பேன்; அவர்கள் மறுபடியும் என்னைக் குத்தி கீழே வீழ்த்துவார்கள். அப்படித்தான் எனக்கு நடந்து வந்தது.

"நான் கிறிஸ்தவனாக ஆகவே முடியாது" என்று எண்ணினேன். ஆனால் பரிசுத்த ஆவி என் வாழ்க்கைக்குள் வந்த போது, அது அதை சாதித்து விட்டது.

ஒரு சமயம் ஒரு ஸ்திரீ இருந்தாள். அவளுடைய மின்சாரத்தைத் துண்டிக்க நான் சென்றிருந்தேன். அப்பொழுது

என் தலையில் மயிர் இருந்தது. அவள் என்னைப் பார்த்து, "பித்தம் பிடித்த முட்டாளே" என்றாள்.

நான், "ஸ்திரீயே, நீ அவ்விதம் என்னைத் திட்டக் கூடாது. ஓ, உனக்கு தேவ பயம் இல்லையா?" என்று கேட்டேன்.

அவளோ, "பித்தம் பிடித்த முட்டாளே, அப்படிப்பட்ட காரியங்களைக் குறித்து என்னிடம் யாராவது பேசவேண்டுமென்று நான் விரும்பினால், உன்னைப் போன்ற பைத்தியக் காரனை அழைக்க மாட்டேன்" என்றாள்.

"ஹூ!" அவள் என்னை எல்லாவிதமான அவதூறான பெயராலும் அழைத்தாள். ஓ, என்னே, அது மாத்திரம் ஒரு ஆண்டுக்கு முன்பு நடந்திருந்தால்! "ஒரு ஸ்திரீயை அடிக்கும் மனிதன், ஒரு மனிதனை அடிக்கக் கூடிய ஆண்மைத்தனம் கொண்டவன் அல்ல" என்று நான் அடிக்கடி கூறுவது வழக்கம். ஆனால் என் தாயாரை அவதூறான பெயரால் அழைத்த போது, அந்த வாக்கை நான் மீறியிருப்பேன். ஆனால் என்ன நடந்தது தெரியுமா? அது என்னை சிறிதும் கோபப்படுத்தவில்லை. நான், "உனக்காக ஜெபிக்கிறேன்" என்று சொன்னேன். அது தொல்லைப்படுத்தவேயில்லை... எனக்கு என்னமோ நடந்துள்ளதென்று நான் அந்த நேரத்தில் அறிந்து கொண்டேன். ஆம், ஐயா! ஓ, என்னே!

நான் சிறுவனாயிருந்த போது, சண்டையிட்டதனால் செய்த தீங்குகள் உங்களுக்குத் தெரியுமா? ஒரே நேரத்தில் நான் ஐந்து மனிதர்களை ஏறக்குறைய கொன்று விட்டேன். பதினாறு குண்டுகள் நிறைத்திருந்த ஒரு துப்பாக்கியை நான் கையிலெடுத்து, நான் கென்டக்கி நாட்டைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால் அந்த பையன்கள் என்னை அடித்த போது, வேறு எந்த காரணத்துக்காகவும் அல்ல... என் தலையை என்னால் நிமிர்த்தவும் கூட முடியவில்லை. ஒரு பையன் என் கைகளை இப்படி பிடித்துக் கொள்வான். மற்றொரு பையன் கையில் ஒரு



கர்த்தர் எனக்குதவி செய்வாராக. (தேவன் நியாயாசனத்தில் உட்காருவார் என்று எனக்குத் தெரியும்). திரையிடப்பட்டிருந்த அந்த கதவு தானாகவே திறந்து மூடத் தொடங்கியது – பம்பிடி, பிளம்பிடி, கா—ப்ளம்ப், கா—ப்ளம்ப், கா—ப்ளம்ப். நான் நினைத்தேன்... அவள், "பில்லி, அங்கே பாருங்கள்" என்றாள்.

நான், "ஆமாம், அது என்ன?" என்றேன்.

அவள், "எனக்குத் தெரியாது" என்றாள்.

நான், "எனக்கும் தெரியவில்லை" என்றேன்.

கதவு பம்பிடி—பம்ப், டி—பம்ப் என்று ஓசையுண்டாக்கி, திறந்து மூடிக்கொண்டிருந்தது, "என்ன நேர்ந்தது?" என்று நான் நினைத்தேன்.

நான் இப்படி பார்த்துவிட்டு, "சாத்தானே, அவளை விட்டுப் போ; இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே அவளை விட்டு வெளியே வா" என்றேன்.

அப்படி நான் கூறினபோது, இவ்வளவு நீளமுள்ள ஒரு பெரிய வௌவால்; அதன் செட்டைகளிலிருந்து நீண்ட ரோமம் தொங்கிக்கொண்டிருந்தது. அது அவள் பின் பக்கத்திலிருந்து "விர்ர்ர்ர்" என்று வேகமாக பறந்து என்னை நோக்கி வந்தது. நான்,

"ஓ, ஆண்டவராகிய தேவனே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் இதனின்று என்னை பாதுகாப்பதாக" என்றேன்.

வேய்ன் படுக்கையிலிருந்து குதித்தெழுந்து பார்த்தான். அது நீண்ட நிழலைப்போல் அங்கு சுற்றிச் சுற்றி வட்டமிட்டு படுக்கைக்குப் பின்னால் சென்றது. வேய்ன் படுக்கையை விட்டு எழுந்து வேகமாக அடுத்த அறைக்கு ஓடினான்.

நான் நெல்லியை வீட்டுக்குக் கொண்டு சென்றுவிட்டு வந்தபோது அதை காணவில்லை.

எத்தனை பேருக்கு நெல்லி சான்டர்ஸை தெரியும்? நல்லது, உங்கள் அனைவருக்கும் என்று நினைக்கிறேன். ஆம், நிச்சயமாக! எனவே அவர்கள்...

அவள் தொடர்ந்து, "என்ன நேர்ந்தது தெரியுமா? நான் அரங்கத்தின் படிகளில் ஏறிச் சென்றால், ஒரு சிலருக்கு என் சாட்சியை அறிவிக்க முடியும் என்று நினைத்தேன்" என்றாள்.

பார், நீ பிசாசின் எல்லைக்குள் சென்று விட்டாய், அதனின்று விலகு! பொல்லாங்கானதாய் தோன்றும் எல்லாவற் றையும் உதறித் தள்ளு!

அவளோ படிகளில் ஏறி சில நிமிடங்கள் அங்கு நின்றாள். முதலாவதாக நடந்தது என்ன தெரியுமா? சில நிமிடங்களுக்குள் ஒரு பையனின் கரங்களைப் பிடித்து நடனமாடத் தொடங்கி விட்டாள்.

பின்பு அவளுக்கு சுயநினைவு வந்த போது, அங்கு நின்று, "நான் நிரந்தரமாக இழக்கப்பட்டேன்" என்று அழுதாள்.

அப்பொழுது நான் நினைத்தேன்: "எனக்கு வேதாகமம் அதிகம் தெரியாது. ஆனால் இயேசு, 'என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்' என்று கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன்" என்று.

வேய்னுக்கும் அப்பொழுது குடிமயக்கம் சற்று தெளிந்து, அங்கு நடப்பதை உட்கார்ந்து கவனித்துக் கொண்டிருந்தான். பாருங்கள்? நான், "பிசாசே, நீ யாரென்று எனக்குத் தெரியாது. ஆனால் இப்பொழுது உன்னிடம் கூறுகிறேன். இவள் என் சகோதரி, இவளைப் பிடித்துக் கொண்டிருக்க உனக்கு எவ்வித உரிமையும் கிடையாது, அவள் அதை செய்ய வேண்டுமென்று நினைக்கவில்லை; அவள் ஒரு நிமிடம் அங்கு நின்றாள்" (அங்குதான் அவள் தவறு செய்தாள்). "அவளை விட்டு நீ வெளியே வரத்தான் வேண்டும். நான் சொல்வது கேட்கிறதா?" என்றேன்.



கல்லை வைத்துக் கொண்டு நான் ஜீவனற்று போகும் வரை என் முகத்தில் குத்துவான். இவ்வுலகில் வேறெதுவுமே...

அவர்கள் என்னை "கென்டக்கி ஸ்வாப் (swab)" என்று அழைத்தார்கள். ஏனெனில் என் தாயார் வாலிபமாயிருந்த போது சிகப்பு இந்தியரைப் போல் காணப்பட்டார்கள் (சற்று முன்பு நான் அவர்களுடைய புகைப்படத்தை நோக்கிக் கொண்டிருந்தேன்), அவர்கள் பாதி சிகப்பு இந்தியர் என்று அந்த பையன்கள் அறிந்திருந்தனர். நான் கென்டக்கியை சேர்ந்தவனாயிருந்து என் தாயார் சிகப்பு இந்தியராக (skaw) இருந்த காரணத்தால் அவர்கள் என்னை "கென்டக்கி ஸ்வாப்" என்று அழைத்தனர். அதற்கு நான் பொறுப்பாளியே அல்ல. நான் கென்டக்கியில் பிறந்தது என் தவறல்ல.

நான் பள்ளிக்கூடத்துக்குச் சென்றபோது எனக்கு உடுக்க துணிகளே இருக்கவில்லை. என் தாயார், தந்தை விவாகத்தின் போது உடுத்த அவருடைய பழைய கோட்டை எடுத்து அதை வெட்டி, எனக்கு கால் சட்டை தைத்துக் கொடுத்தார்கள். நான் பள்ளிக்கு முதன்முதலாக சென்ற போது அதை அணிந்து கொள்ள நான்... என் தாயார் எனக்கு வெள்ளை நிறக் காலுறையை அணிவித்து அதன் மேல் டென்னிஸ் காலணிகளை அணிவிப்பது வழக்கம். இந்த பையன்கள் என்னை நோக்கி, "உன்னைப் பார்த்தால் பயந்தாங்கொள்ளியான (windy) கென்டக்கி நாட்டான் போல் இருக்கவில்லையா?" என்று கேலி செய்வார்கள். இது நான் பள்ளிக்கூடத்தில் இருந்த நாட்கள் முழுவதும் நடந்து வந்தது.

ஓரிரண்டு பையன்கள், நான் சாலையில் ஏதோ ஒரு சிறு பெண்ணுடன் அவளுடைய புத்தகங்களை தூக்கிக் கொண்டு நடந்து சென்ற காரணத்தால்... அவ்விதம் நான் செய்வது அவர்களுக்கு பிரியமில்லை. அவர்கள் என்னை அங்கு சந்தித்து, நான் நினைவிழந்து போகும் வரைக்கும் என்னை அடித்தார்கள். அவர்கள் என்னை போக விட்டால், நான் நேராக வீட்டுக்கு

போய்விடுவேன் என்று அவர்களுக்கு வாக்கு கொடுத்தேன். எனவே அவர்கள் என்னை போகவிட்டு, எனக்கு நான்கைந்து உதைகள் கொடுத்து, என்னைக் குத்தி கீழே வீழ்த்தி, என் முகம் முழுவதும் குத்தினார்கள். நான் அடிபட்டவனாக வயலின் வழியாக அந்த நிலையில் வீடு திரும்பினேன்.

என்னிடம் .22 வின்செஸ்டர் துப்பாக்கி இருந்தது. அது கதவண்டையில் வைக்கப்பட்டிருந்தது. நான் தோட்டாக்களால் நிறைக்கப்படடிருந்த அந்த துப்பாக்கியை என் கையிலெடுத்துக் கொண்டு, புதரின் வழியாக சென்று, சாலையின் பக்கத்தில் ஒளிந்திருந்து, இந்த ஐந்தாறு பையன்கள் வருவதற்காக காத்திருந்தேன். அவர்கள், "அந்த கென்டக்கி நாட்டான் இப்பொழுது முதற்கொண்டு அவன் நிலை என்னவென்பதை உணருவான்" என்று பேசிக் கொண்டே வந்தனர்.

நான் துப்பாக்கியின் மேல்கம்பியை (hammer) பின்னால் இழுத்து, ஒளிந்த இடத்திலிருந்து வெளி வந்து, "உங்களில் யார் முதலில் இறக்க விரும்புவது, அப்பொழுது நீங்கள் மற்றவர்களை கவனிக்க மாட்டீர்கள்" என்றேன். அவர்கள் அலறத் தொடங்கினர். நான், "அலறாதீர்கள், நீங்கள் ஒருவர் பின் ஒருவராக எல்லாரும் சாகப் போகிறீர்கள்" என்றேன். அதை நான் உண்மையில் செய்ய வேண்டுமென்று நினைத்தேன். நான் மேல் கம்பியை இழுத்து சுட்டேன். துப்பாக்கியிலிருந்த குண்டு வெடித்தது. நான் வேறொரு தோட்டாவை உள்ளே போட்டு சுட்டேன். அதுவும் வெடித்தது. இப்படியாக பதினாறு தோட்டாக் களை நான் தரையை நோக்கி சுட்டேன். அவை ஒவ்வொன்றும் வெடித்தன. அந்த பையன்கள் அலறிக் கொண்டு ஓடி, மலையின் மேல் ஏறி ஓடினார்கள்.

அவர்கள் போன பிறகு அங்கு நான் நின்றேன். எனக்கு அதிக கோபம் வந்தால், நான் அழமாட்டேன், ஒரு முட்டாளைப் போல் சிரிப்பேன், அப்பொழுது என் கண்களிலிருந்து கண்ணீர்



நான், "என்ன நேர்ந்தது?" என்று கேட்டேன். எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நான் அப்பொழுது ஒரு வாலிபன். நான் நினைத்தேன்...

அவள், "ஓ, சகோ.பில், நான் சின்னாபின்னமாகிவிட்டேன்" என்றாள்.

நான், "அமைதியாயிரு, சகோதிரியே, நடந்ததை கூறு" என்றேன்.

அவள், "நான் தெருவின் வழியாக நடந்து ரெட்மென் அரங்கத்தை அடைந்தேன்..." என்றாள். (அங்கு சனிக்கிழமை இரவுகளில் நடனம் நடப்பது வழக்கம்). அவள், "என் உடைகளுக்காக துணி வாங்கிக்கொண்டு திரும்பும்போது, இசையைக் கேட்டேன்", மேலும் அவள், "உங்களுக்குத் தெரியுமா" என்றாள். "நான் ஒருநிமிடம் அங்கு நின்றேன். அது இனிமையாகிக் கொண்டே இருந்தது. 'உனக்கு தெரியுமா, நான் அங்கு நின்றால் தவறொன்றுமில்லை' என்று நினைத்தேன்" என்றாள்.

அங்குதான் அவள் தவறு செய்தாள் – சற்று நேரம் அங்கு நின்றாள். அவள் இசையைக் கேட்டுக்கொண்டேயிருந்தாள்.

அவள், "ஓ, ஆண்டவரே, உம்மை நான் நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர். நானும் லீயும் இந்த இடத்தில் நடன போட்டிகளில் எத்தனையோ விருதுகளை வென்றது என் ஞாபகத்திற்கு வருகிறது. அந்த இசை முன்பு என்னைக் கவர்வது வழக்கம். ஆனால் இப்பொழுது இல்லை" என்று நினைத்தாள்.

ஓ, ஓ! ஓ, ஓ! அது உன்னைக் கவரவில்லை என்றா நினைக்கிறாய்? அது ஏற்கனவே உன்னைக் கவர்ந்து விட்டது. அவன் உன்னை நடன கூடத்திற்கு அனுப்பினதற்கு அது சமானம். பாருங்கள்?

பட்டு அப்பொழுது ஏறக்குறைய ஒரு ஆண்டு காலம் தான் ஆகியிருந்தது.

அப்பொழுது திடீரென்று வாடகை காரின் கதவு திறக்கப் பட்டு வேகமாக மூடும் சத்தம் கேட்டது, யாரோ கதவை வேகமாக தட்டி, சகோ.பில், சகோ.பில் என்று கூப்பிடுவது கேட்டது (சகோ.பிரன்ஹாம் பிரசங்க பீடத்தை பதினைந்து தடவை தட்டுகிறார் – ஆசி).

நான், "இது என்ன, யாரோ மரித்துக்கொண்டிருக் கிறார்கள் போலிருக்கிறது" என்று எண்ணினேன். நான் கதவினருகே ஓடினேன். என் பழைய துணிகளை எடுத்து, என் பைஜாமாவின் மேல் சுற்றிக்கொண்டு, வேய்னையும் போர்த்தி விட்டு, கதவினருகே ஓடினேன்.

அது பெண்ணின் குரல் போன்றிருந்தது. நான் கதவைத் திறந்த போது, இந்த வாலிபப் பெண் அங்கு நின்று கொண்டிருந்தாள். அவள், "உள்ளே வரலாமா?" என்று கேட்டாள்.

நான், "உள்ளே வா" என்று சொல்லி விளக்கைப் போட்டேன்.

அவள் அழுதுகொண்டே, "ஓ, பில், பில்லி, நான் முடிந்து போனேன், நான் முடிந்துபோனேன்" என்றாள்.

"என்ன நேர்ந்தது, நெல்லி மாரடைப்பு ஏதாகிலும் ஏற்பட்டதா?" என்று கேட்டேன்.

அவள், "இல்லை, சகோ.பில். நான் ஸ்பிரிங் தெரு வழியாக வந்துகொண்டிருந்தேன். உண்மையில் சகோ.பில், உண்மையில் சகோ.பில், நான் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவேயில்லை, நான் தவறு செய்ய வேண்டுமென்று நினைக்கவேயில்லை" என்றாள்.



வடியும். இப்பொழுது, அது ஒரு கோபாவேசம். தேவன் இல்லாமல் போயிருந்தால், நான் கொலைகாரனாகியிருப்பேன்.

அந்த தோட்டாக்களை நான் பொறுக்கி அவைகளை துப்பாக்கியில் நிறைத்து, "பௌ, பௌ". அவை முன்னைப் போல் நன்றாக வெடித்தன. கிருபையைக் குறித்து பேசினால், இதுதான் கிருபை!

கேள்விகளும் பதில்களும் (COD 2:22), ஆகஸ்ட் 30, 1964
மாலை, பத்தி எண் 94–105

# என் இருதயத்தில் ஏதோ ஒன்றுக்காக நான் பசியாயிருந்தேன்

## *"SOMETHING HUNGERING IN MY HEART"*

நான் பதினெட்டு வயது வாலிபனாக இருக்கையில் கர்த்தரை விட்டு ஓடிக் கொண்டிருந்தபோது, ஒரு குறிப்பிட்ட நாளை நான் நினைவு கூருகிறேன். நான் மேற்கு பகுதிக்கு சென்றேன். என் தந்தை அங்கு குதிரைகள் சவாரி செய்து ஜீவனம் நடத்துகிறவராயிருந்தார். நான் அங்கே சென்று குதிரைகளைப் பழக்குவிக்கிற வேலையை செய்ய விரும்பினேன். அப்பொழுது, என் இருதயத்தில் ஏதோ ஒன்றுக்காக நான் பசியாயிருந்தேன். ஓ, நான் அதை உங்களுக்கு சொல்லுவேன்.

நான் பாப்டிஸ்ட் சபை பிரசங்கியாரிடம் சென்ற போது, அவர் என்னிடம், "நீ எழுந்து நின்று, 'இயேசு தேவனுடைய குமாரன்' என்று மட்டும் சொன்னால் போதும், நாங்கள் உன்னுடைய பெயரை சபைப் பதிவேட்டில் பதித்து விடுவோம்" என்று கூறினார். அதுவும் என்னைத் திருப்தி செய்யவில்லை.

நான் சென்ற இடமெல்லாம் ஒவ்வொருவரும்... நான் ஏழு நாள் ஓய்வு சபையைச் சேர்ந்த சகோதரன் பார்கர் (Brother

Barker) என்ற அருமையான நேசமுள்ள சகோதரர் ஒருவரிடம் சென்றேன். அவரும் என்னிடம், “பில்லி, நீ வந்து, கர்த்தருடைய ஓய்வை ஏற்றுக்கொள்” என்று கூறினார். (நான் ஏற்கனவே அந்த ஓய்வை என் உள்ளத்தில் பெற்றிருக்கிறேன்). ஆனால் அவர், “ஓய்வு நாளை ஏற்றுக்கொள்” என்று தான் கூறினார். அப்பொழுது, நான், “ஓ, இதுவும் நான் தேடுவதை கொடுப்பதாக இல்லையே” என்று எனக்குள் எண்ணினேன்.

நான் மேற்கில் சென்றேன். அன்றொரு இரவில் நாங்கள் மந்தையை மேய்த்து அதை மடக்கினோம். குதிரையை விட்டு சேணத்தை எடுத்துவிட்டு, அங்கிருக்கும் கேம்ப் பையையும் எடுத்து வைத்துவிட்டு, படுத்துறங்கப் போகையில், அச்சேணத்தையே தலைக்கு தலையணையைப் போல் உபயோகிப்பதுண்டு. அவ்வாறு நான் அன்றிரவில் மிக வயதான பைன் மரங்களின் அடியில் படுத்துக் கொண்டிருந்தேன். நான் பகல் நேர கண்காணிப்பு வேலையைச் செய்தேன். ஆகவே இரவு நேர வேலையைச் செய்யும் பையன்கள் மந்தையை உள்ளே கொண்டு வந்தார்கள். அவர்களில் டெக்ஸாஸைச் சேர்ந்த “ஸ்லிம்” என்றழைக்கப்படும் ஒரு வயதான மனிதர் தன்னுடைய கிட்டாரை மீட்டி, *“அவர் நாமத்திற்கே மகிமை”* என்ற பாடலை இசைத்தார்.

இன்னொரு நபர் ஒரு சீப்பின் மேல் ஒரு தாளை வைத்து அதை ஊதி இசைத்தார் (சகோதரன் பிரான்ஹாம் அவர்கள், “அவர் நாமத்திற்கே மகிமை” என்ற பாடலை மௌனமாக இசைக்கிறார் – ஆசி) அவர்கள் வேறு பாடல்களையும், கௌபாய் பாடல்களையும் பாடினார்கள். “மீட்பர் மரித்த குருசண்டையில்” என்ற பாடலையும் பாடினார்கள்.

நான் புரண்டு படுத்தேன். என் தலையில் மேல் பக்கமாக கம்பளியை எடுத்துப் போட்டுவிட்டு, பின்னால் திரும்பிப் பார்த்தேன். இரவில் காணப்பட்ட நட்சத்திரங்கள் கீழே இறங்கி வந்து அந்த பைன் மரங்களின் உச்சியில் தொங்கிக் கொண்டிருப்பது போலவும், அங்கிருந்த மலைகள் மேலும் வந்திறங்கி



களங்கமற்றதாகவும் காணப்படுகிறது! நான் அப்படி செய்யாமலிருந்தால் நலமாயிருக்கும்” என்றாள்.

நான், “நெல்லி, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களினின்றும் சுத்திகரிக்கிறது. தேனே, நீ சென்று விசுவாசி” என்றேன்.

வேய்ன் ப்ளட்ஸோ (அவனை உங்களில் அநேகருக்கு தெரியும். அநேக ஆண்டுகளாக அவன் என் ஆப்த நண்பன்). அவன் பயங்கர குடிகாரனாயிருந்தான். என் சகோதரன் எட்வர்ட்டுடன் அவன் இங்கு வந்திருந்தான். அவன் குடித்து தெருவில் விழுந்து கிடந்த போது, அவனை நான் தூக்கிக் கோண்டு வந்தேன். ஏனெனில் போலீசார் அவனைக் கைது செய்ய முயன்றனர். அவனை இங்கு கொண்டுவந்தேன். அப்பொழுது நான் ஒரு பிரசங்கி. என் பெற்றோருடன் வசித்து வந்தேன். அது எனக்கு விவாகமாவதற்கு அநேக ஆண்டுகட்கு முன்பு. நான் அவனைக் கொண்டு வந்து படுக்கையில் கிடத்தினேன். நான் சாய்வு நாற்காலியில் உறங்கினேன். பிரன்ஹாம் குடும்பம் பெரியது என்று உங்களுக்குத் தெரியும் (நாங்கள் பத்து பேர்). எங்களுக்கு நாலு அறைகள் இருந்தன. என்னிடம் ஒரு பழைய சாய்வு நாற்காலி இருந்தது. நான் அதை இழுத்து, அதில் உறங்கினேன். குடித்திருந்த வேய்னை நான் படுக்கையில் கிடத்தினேன். அவனை வீட்டுக்குத் தூக்கிக் கொண்டுவந்து படுக்கையில் கிடத்த வேண்டியதாயிற்று. நான் அங்கு படுத்துக் கொண்டிருந்தேன்.

நான், “வேய்ன், இப்படி செய்வது உனக்கு வெட்கமாயில்லையா?” என்று கேட்டேன்.

அவன், “உ, து, பில்லி, என்னிடம் அப்படி பேசாதே” என்றான் (சகோ.பிரன்ஹாம் குடிகாரன் உளறுவதைப் போல் பேசி காண்பிக்கிறார் – ஆசி). நான் அவன் மேல் என் கையைப் போட்டு, “வேய்ன், உனக்காக நான் ஜெபிக்கப் போகிறான். கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக” என்றேன். நான் இரட்சிக்கப்

முகங்குப்புற விழுந்தாள். தேவன் அவளை ஆசீர்வதிப்பாராக. அவள் பீடத்தின் முன்னால் விழுந்து கிடந்து, தலையை தூக்கி அழ ஆரம்பித்தாள். அவளுடைய கண்ணீர் கன்னங்களில் வழிந்தது. அவள், “பில்லி” என்றாள் (அவளுக்கு என்னைத் தெரியும்). அவள், “நான் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்” என்றாள்.

நான், “நெல்லி, நீ இரட்சிக்கப்பட முடியும். பெண்ணே, இயேசு உன்னை ஏற்கனவே இரட்சித்து விட்டார். அவருடைய வார்த்தையின் அடிப்படையில் அதை நீ ஏற்றுக்கொள்ள வேண்டும்” என்றேன்.

அவள் அங்கு தங்கியிருந்து, அழுது, ஜெபித்து, உலக காரியங்களுக்கு மறுபடியும் செவி கொடுப்பதில்லையென்று தேவனிடம் வாக்கு கொடுத்தாள். உடனே அவளுடைய ஆத்துமாவில் ஒரு அழகான இனிமையான சமாதானம் குடிகொண்டது. அவள் எழுந்து சத்தமிட்டு, தேவனைத் துதித்து, அவரை மகிமைப்படுத்தினாள்.

அதற்குபின்பு ஆறு அல்லது எட்டு மாதங்கள் கழித்து, ஒரு இரவு அவள் ஸ்பிரிங் தெரு வழியாக வந்து கொண்டிருந்தாள்.

இப்பொழுது அவள் வாலிப பெண், அவளுக்கு அப்பொழுது சுமார் பதினெட்டு வயதிருக்கும். அவள் என்னிடம் வந்து, “ஹோப்...” (அது என் மனைவி. அவள் மரித்து விட்டாள்). அவள், “காண்பதற்கு நான் ஹோப்பையும் ஜீனையும் போல் இருந்திருந்தால் நலமாயிருக்கும். அவர்கள் உலக காரியங்களில் சிக்கிக்கொண்டதேயில்லை” என்றாள். அவள், “உலகம் நம்மேல் ஒரு அடையாளத்தை போட்டுவிடுகிறது. எனக்கு கரடுமுரடான தோற்றம் உள்ளது. நான் முகவர்ணம் தீட்டிக்கொள்வதை விட்டுவிட்டேன். ஆயினும் என் முகம் கரடுமுரடாக காணப்படுகிறது. அவர்களுடைய முகம் எவ்வளவு இளமையாகவும்



விட்டது போலவும் காணப்பட்டது. பைன் மரங்களில் இருந்து சதாகாலமும் மனிதரை நோக்கி அவர்கள் காதுகளில் முணு முணுக்கும் அந்த வழக்கமான சப்தமாகிய, “ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்?” என்று அவர் என்னை நோக்கி கூப்பிட்டது எனக்குக் கேட்க முடிந்தது.

மூன்று வாரங்கள் கழித்து, நான் நகரத்திற்குள் சென்றேன். அந்தப் பையன்கள் யாவரும் மது அருந்தியிருந் தார்கள். நான் மட்டும் குடிக்கவில்லை. நான் எப்படியாவது அவர்களை மோட்டார் வாகனத்தில் ஏற்றி வீட்டுக்கு கொண்டு போய் சேர்த்தாக வேண்டும் என்ற நிலை இருந்தது. குடித்திருந்த நிலையில் அவர்களுக்கு பாதுகாப்பின்றி அபாயகரமானதாக இருந்தது. ஏனெனில் அவர்கள் ஒருவருக்கொருவர் முன்பாத விரல்களை சுட்டுக்கொண்டார்கள். அவர்கள் அங்கே ஒரு நேர்க்கோடு ஒன்றைப் போட்டு, அதில் வளையாமல் கோட்டின் மேல் நேராக யார் நடக்கிறார்களோ அவர்களுக்கு 5 டாலர் என்று பந்தயம் கட்டிக்கொண்டு நடப்பார்கள். அவர்களால் குடித்த நிலையில் பாத சாரிகளுக்கென போடப்பட்டிருக்கும் நடை பாதையிலேயே சரியாக நடக்க முடியாது. இவ்வாறு அவர்கள் ஆட்டம் போட்டு, பின்பு, குடிவெறி தெளிந்து தங்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு போவார்கள்.

அவர்கள் யாவரும் குடித்து வெறித்திருந்தார்கள். நானோ தனியே அப்புறம் போய் உட்கார்ந்தேன். இது 35 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம். நான் தனியே போய் உட்கார்ந்தேன். அந்நாட்களில் பீனிக்ஸ் ஒரு சிறிய ஊர் தான். அவர்கள் விக்கன் பர்கிலிருந்து வந்திருந்தார்கள். நான் அவ்வாறு உட்கார்ந்து கொண்டிருக்கையில், வாலிபமான ஒரு ஸ்பானிய பெண் ணொருத்தி, நலுக்கி குலுக்கி கொண்டு அவ்வழியாக வந்தாள். பெரிய தொப்பி அவள் தலைக்குப் பின்னால் தொங்கிக் கொண்டிருக்க, அவ்வழியாகக் கடந்து சென்ற அவள், தனது சிறிய கைக்குட்டை ஒன்றை என்னருகில் நைசாகப் போட்டு விட்டுச் சென்றாள். நான் அவளை நோக்கி, “ஏய், உனது

கைக்குட்டையை கீழே போட்டு விட்டுச் சென்றாயே" என்றேன். நான் அவள் சமிக்ஞையின் பேரில் ஆர்வம் காட்டவில்லை. (அந்நாட்டில் பெண்ணொருத்தி ஒரு ஆணிடம் சல்லாபம் கொள்ள தன்னுடைய விருப்பத்தை தெரிவிக்க இவ்விதமான ஒரு சமிக்ஞையை அவ்வாணுக்குத் தெரிவிப்பதுண்டு – மொழி பெயர்ப்பாளர்.)

கீழ்ப்பகுதியில் உள்ள தெருவில் அப்பொழுது ஒரு சப்தம் கேட்டதும் நான் அங்கே கீழே போனேன். அங்கே முகத்தில் வைசூரி வடுக்கள் கொண்ட வயதான கௌபாய் ஒருவர் உட்கார்ந்து தன்னுடைய கிட்டாரில், தன் கண்களில் கண்ணீர் வடிய இசைத்து, "அவர் நாமத்திற்கு மகிமை" என்ற பல்லவியைப் பாடிக் கொண்டிருந்தார். அவர் அந்த மோசமான கூட்டத்திலிருந்து இரட்சிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவராயிருந்தார்.

அவரது கன்னத்தில் கண்ணீர் வடிய பாடிக் கொண்டிருந்தார். நான் அவரருகில் சென்றதும் பாடுவதை நிறுத்தி விட்டு, "சகோதரனே, இந்த அற்புதமான கிறிஸ்துவை நீ பெற்றுக் கொள்கிற வரையிலும், இவ்வனுபவம் எத்தகையது என்பதை நீ அறிய மாட்டாய்" என்று கூறினார்.

*"அவர் நாமத்திற்கு மகிமை"*

நான் என்னுடைய தொப்பியை கீழே இழுத்து விட்டுக் கொண்டு அங்கிருந்து கிளம்பிவிட்டேன். அவர் சமுகத்தை விட்டு உங்களால் ஒளித்துக்கொள்ள முடியாது. நீங்கள் மறைந்திருக்கிற இடத்தை விட்டு வெளியே வந்து, கூப்பிடுகிற அவருக்கு முன்பாக வந்து, உங்கள் பாவங்களை அறிக்கை செய்தாக வேண்டும். ஓ! அவர் அற்புதமானவராக இருக்கிறார். ஆம், அவர் அப்படித்தான் இருக்கிறார்.

சர்தை சபையின் காலம், டிசம்பர் 9, 1960, பத்தி எண் 195–205



பாருங்கள், நீங்கள் தேவனுக்கு மரியாதை செலுத்த வேண்டும். நீங்கள் அதை செய்தே தீர வேண்டும். தேவன் மரியாதையை அதிகாரத்துடன் கேட்கிறார்.

மரியாதை, அக்டோபர் 15, 1961, பத்தி எண் 91–97

# ஒரு பிசாசு துரத்தப்படுதல்

## *CASTS A DEVIL OUT*

ஒரு சமயம் இங்கு ஒரு சிறு பெண் இருந்தாள். இன்றைக்கும் கூட அவள் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கலாம். அவளுடைய பெயர் நெல்லி சான்டர்ஸ். முதன்முறையாக பிசாசு துரத்தப்பட்டதை நான் கண்டிருக்கிறேன் என்றால் (நாங்கள் கல்லறைத் தோட்டத்துக்கு அப்பால் மூன்று பிளாக்குகள் தள்ளி குடியிருந்தோம்). அப்பொழுதுதான் நான் ஒரு பிரசங்கியானேன். நான் இந்த மூலையில் ஒரு கூடார கூட்டத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன்.

அந்த சிறு பெண் மிகச் சிறந்த நடனக்காரி. அவள் இங்குள்ள உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள். அவளும் லீஹார்னும் (இந்த பட்டினத்திலுள்ள உங்கள் அநேகருக்கு லீஹார்னைத் தெரியும். அவன் குளிக்கும் அறை ஒன்றை நடத்தி வருகிறான்). அவளும் லீஹார்னும் நாட்டிலேயே மிகச்சிறந்த நடன ஜோடி, அவன் ஒரு கத்தோலிக்கன். அவர்களுக்கு மதம் ஒரு பொருட்டல்ல. எனவே (நெல்லியும் மற்றவர்களும்), அவள் சிறந்த நடனக்காரி, அவனும்கூட. அங்கு 'ப்ளாக் பாட்டம்', 'ஜிட்டர்பர்க்ஸ்' போன்ற நடனங்கள் ஆடப்பட்டன. இவர்களிருவரும் நாட்டிலேயே மிகச்சிறந்த நடனக்காரர்கள்.

ஒரு நாள் (ஒரு இரவு) அவள் தடுமாறிக்கொண்டு கூட்டத்திற்கு வந்தாள். அந்த சிறு நெல்லி பீடத்தின் முன்னால்

அங்கு பகல் உணவு நேரத்தில், நான் ஒரு சான்ட்விச்சை தின்று கொண்டு, அவனிடம் தேவனைக் குறித்து பேசிக் கொண்டிருந்தேன். பகல் உணவு வேளையில், கிறிஸ்துவுக்காக ஒரு ஆத்துமாவைக் கொள்ள ஒரு இடத்தை தேடிப்பிடித்து, அங்கு நான் செல்வது வழக்கம். அந்த பாவி, "திரு.பிரன்ஹாமே, என் தாய் அப்படிப்பட்ட மார்க்கத்தை – இருதயத்தை உணர்த்தும் மார்க்கத்தை – கடைபிடித்திருந்தார்கள்" என்றான். அவன் கன்னங்களில் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது.

நான், "அவர்கள் மரித்து எத்தனை ஆண்டுகளாயின?" என்று கேட்டேன்.

அவன், "அநேக ஆண்டுகள். அவர்கள் எனக்காக எப்பொழுதும் ஜெபம் செய்து வந்தார்கள்" என்றான்.

நான், "அவர்களுடைய ஜெபத்திற்கு செவி கொடுத்த தேவன் இப்பொழுது பதிலளிக்கிறார்" என்றேன்.

அந்த முரட்டு மனிதன் அங்கு வந்து, "ஹல்லோ" என்றான். அவன் குடித்திருந்தான். அவன், "பில்லி கேள். நீ இந்த கொட்டகைக்கு எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம். ஆனால் உன்னுடைய பழைய உருளும் பரிசுத்தர் மார்க்கத்தை இங்கே கொண்டு வராதே" என்றான்.

நான் திரும்பி அவனைப் பார்த்தேன். "கிறிஸ்து வரவேற்கப்படாத இடத்துக்கு நான் வரமாட்டேன்" என்றேன்.

அப்பொழுது என் இருதயத்தில் ஒரு சத்தம், "நீ எதை விதைக்கிறாயோ அதையே அறுப்பாய். உன் கழுத்தில் ஏந்திரக் கல்லை கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே உன்னை அமிழ்த்துவது நலமாயிருக்கும்" என்றது. அன்று பிற்பகல் அவனுடைய மருமகன், சரக்குகள் முழுவதுமாக ஏற்றியிருந்த இரண்டு டன் ஷெவர்லே லாரியை அவன் மேல் தெரியாமல் ஏற்றி, அவனைத் தரையில் கூழாக்கி விட்டான்.



# மனமாற்றத்தின் போது, சிலுவையைப் போல் ஒளி தோன்றி ஒரு சத்தம் பேசுதல்

## *VOICE AND CROSS OF LIGHT AT CONVERSION*

நாம் வாழ்கிற இக்காலத்தில், என்னுடைய குணப்படுதலின் போது, நான் இந்நிலையைக் கண்டேன். சபையானது என்னைப் பற்றிக் கொள்ளுமுன்னர் தேவன் என்னைப் பிடித்துக் கொண்டு விட்டார். அதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இந்த சர்வ குழப்பங்களினால் நான் ஒருவேளை தேவனற்றவனாக ஆகியிருப்பேன். ஆம், ஐயா. "நல்லது, வந்து எங்களோடு சேர்ந்து கொள்ளுங்கள். இல்லையெனில், உங்கள் கடிதத்தை எடுத்துக் கொண்டு மற்றதை சேர்ந்து கொள்ளும்" என்று கூறுனர்.

"நீ உனது கடிதத்தைக் கொண்டு வந்து ஐக்கியத்தில் சேர்ந்து கொள்ளுகிறதில்லையா?" என்றனர்.

ஒரேயொரு எழுத்துத்தான் உண்டு, அது கிறிஸ்து உங்களுடைய பெயரை ஆட்டுக் குட்டியானவருடைய ஜீவ புத்தகத்தில் எழுதும்போது உள்ளதாகும். அது ஒன்றுதான் உள்ளது.

நான் இந்த மதஸ்தாபனங்களையெல்லாம் காண்கையில்... ஐரிஷ் குடும்பப் பின்னணியை உடைய நாங்கள் முன்பு கத்தோலிக்கராயிருந்தோம். அதுதானே, ஊழலுள்ளதாயும், நாற்ற மெடுத்ததாயும் இருந்தது. இந்நகரத்திலுள்ள ஒரு குறிப்பிட்ட ஸ்தாபன சபைக்கு நான் சென்றிருந்தேன். அவர்கள், "நாங்களே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறோம். எங்களிடம் அதன் யாவும் உள்ளது" என்றனர்.

நியூ ஆல்பனியிலுள்ள மற்றொரு சபைக்குச் சென்றேன். அவர்களோ, "அங்கிருக்கிறவர்களுக்கு தாங்கள் என்ன பேசு கிறோம் என்பதே அறியார்கள்" என்று கூறினார்கள்.

கத்தோலிக்கரோ, "நீங்களெல்லாருமே தவறாயிருக்கிறீர்கள்" என்றனர்.

நான், "இது என்ன இப்படியிருக்கிறது" என்று எண்ணினேன்.

நான் ஜெர்மன் லூத்தரன் சபையைச் சேர்ந்த ஒரு பையனுடன் விளையாடுவதுண்டு. அவனிடம், "நீ எந்த சபைக்குப் போகிறாய்?" என்று கேட்டேன்.

"நான் இன்ன சபைக்குப் போகிறேன்" என்று கூறினான்.

நான் அந்த சபைக்கும் சென்றேன். அவர்களும் தாங்கள் தான் வழி என்று கூறக் கேட்டேன். இம்மானுவேல் பாப்டிஸ்ட் சர்ச் அல்லது முதல் பாப்டிஸ்ட் சபையைச் சேர்ந்த சகோ. டேல் அவர்களிடம் சென்றேன். "இதுதான் வழி" என்று அவர்கள் கூறினர்.

நான் பிறகு, ஐரிஷ் சபைக்குச் சென்றேன். ஆனால் அவர்களும், "இதுவே மார்க்கம்" என்று கூறினர்.

"ஓ, நான் மிகவும் குழப்பமடைந்து போயிருக்கிறேன், என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை. ஆனால் நான் சரியானபடி ஆகவேண்டும் என்று நான் நம்புகிறேன்" என்றேன். என்ன செய்வதென்றே எனக்குத் தெரியவில்லை; எப்படி மனந் திரும்புவது என்றே எனக்குத் தெரியவில்லை. நான் ஒரு கடிதம் எழுதினேன். அக்கடிதத்தில் நான் எழுதினதாவது:

அன்புள்ள ஐயா,

இந்த வழியாக நீர் கடந்து செல்லுகிறீர் என்பதை நான் அறிவேன். ஏனெனில் நான் இங்கே தான் அணில் வேட்டைக்காக அமர்ந்திருப்பதுண்டு. நீர் அருகில் வருகிறீர் என்றும், நீர் இங்கே இருக்கிறீர் என்றும் நான் அறிவேன். நான் உம்மிடம் ஒரு விஷயத்தை கூற விரும்புகிறேன்.



"கிறிஸ்துவின் முதல் வருகைக்கு முன்பாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டு, முன்னோடினது போல, கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக போகும்படி, நான் உன்னை ஒரு செய்தியோடு அனுப்புகிறேன்" என்று கூறியதை நான் நினைவு கூருகிறேன். அவ்வாறே உலகமெங்கிலும் செய்தியானது புறப்பட்டு போய்விட்டது, அதினால் எழுப்புதல் அக்கினியானது கடந்த பதினைந்து ஆண்டு காலமாக ஏறத்தாழ ஒவ்வொரு மலையின் மேலும் நிலைபெற்றுள்ளது. தேசங்கள் தோறும் தெய்வீக சுகமளித்தலும், வல்லமையும், திரும்ப அளிக்கப்படுதலும் ஏற்பட்டுள்ளது. மேலும், இப்பொழுது அது இறுதியான உச்சகட்டத்தை பளீரென அளிக்க ஆயத்தமாயுள்ளது என்று நான் விசுவாசிக்கிறேன்; அவ்வாறு ஆகும்பொழுது, சபையை மகிமையில் எடுத்துக்கொள்வதற்கான விசுவாசத்தை அது கொண்டு வரும். அவள் தானே இந்த செய்திகளில் தங்கியிருக்கிறாள். நாம் உண்மையாகவே கடைசி காலத்தில் இருக்கிறோம். அவைகள் யாவையும் குறித்து நாம் பேசியிருக்கிறோம், ஆனால் அக்காரியமானது இப்போது நம் மேல் அசைந்து வந்துள்ளது. இங்கே ஒருவர் இருக்கிறார், ஆம் ஐயா, அவருக்கு செவி கொடுங்கள். அது சரிதான்.

முற்றிலுமானவர், டிசம்பர் 30, 1962, பத்தி எண் 207–212

# ஒரு குறைகூறுபவன் மேல் நியாத்தீர்ப்பு தாக்குதல்

## *JUDGMENT STRIKES A CRITIC*

சில நாட்களுக்கு முன்பு நியூஆல்பனியில், ஒரு பாவியுடன் நான் நின்று பேசிக்கொண்டு, அவனைக் கிறிஸ்துவினிடம் வழி நடத்திக் கொண்டிருந்த போது, மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் கொட்டகையிலுள்ள முரட்டு கையுடைய, பெரிய உருவம் படைத்த ஒருவன் – அவன் என் நண்பன். அவனுடைய மருமகன் பக்கத்திலுள்ள அந்த கொட்டகையின் உரிமையாளர்.

லவோதிக்கேயா சபையின் காலம், டிசம்பர் 11, 1960, பத்தி எண் 43–49

# அக்கினிஸ்தம்பம் வெளிப்படையாக தோன்றுதல்

## *PILLAR OF FIRE APPEARS PUBLICLY*

ஒருவர் கூறினார், டாக்டர் டேவிஸ் என்னிடம் கூறினார், "பில்லி, நீர் அப்படிப்பட்ட காரியத்தைப் பிரசங்கிக்கிறீரென்றால், சபையின் தூண்களுக்குத்தான் நீர் வார்த்தையைப் பிரசங்கிப்பதாக அது இருக்கிறது."

"அப்படியென்றால், நான் தூண்களுக்கு தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பேன். ஏனெனில், தேவன் இந்தத் தூண்களைக் கொண்டு ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டு பண்ண வல்லவராயிருக்கிறார்" என்று பதிலளித்தேன். அது சரிதான். தேவனுடைய வார்த்தை உண்மையாயிருக்கிறது.

"அவர்கள் நீர் கூறுவதை விசுவாசிப்பார்கள் என்றா எண்ணுகிறீர்கள்?" என்று கேட்டார்.

"அது என் வேலையல்ல, அந்த வார்த்தையோடு உத்தமமாக நிலைத்திருப்பதே எனது கிரியையாயிருக்கிறது" என்று நான் கூறினேன். அது சரிதான்.

அவர் மேலும், "தெய்வீக சுகமளித்தல் என்ற உபதேசத்தோடு இந்த கல்வியறிவு நிறைந்த இவ்வுலகை சந்திக்க முடியும் என்று எண்ணுகிறீர்களா?" என்று கேட்டார்.

"அது என்னுடைய தெய்வீக சுகமளித்தல் அல்ல, அது அவருடைய வாக்குத்தத்தமாகும். அவரே அந்தக் கட்டளையைக் கொடுத்தவர்" என்று பதிலளித்தேன்.

ஓ, 1933ம் ஆண்டில் ஜூன் மாதத்தில் அந்த நதியில் அப்பெரிய ஒளியினுள்ளே அவர் தீவிரமாக வந்திறங்கி நின்று,



நான் நினைத்தேன், "இப்பொழுது ஒரு நிமிடம் பொறு, நான் பேச விரும்புகிற எவரையும் நான் காணவில்லை. நான் அவரிடம் பேச விரும்புகிறேன். நல்லது, இப்பொழுது, அதை எப்படிச் செய்வது என்று தான் எனக்குத் தெரியவில்லை" என்று எண்ணினேன்.

நான் அங்கிருந்த ஒரு கொட்டகைக்குச் சென்றேன். அங்கே சேதமுற்ற ஒரு பழைய மோட்டார் வாகனம் நின்றிருந்தது. அந்த இடம் தண்ணீரால் ஈரமாயிருந்தது. "நான் ஒரு படத்தைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் தங்கள் கரங்களை இவ்வாறு வைத்திருக்கிறார்கள் என்று நம்புகிறேன்" என்றேன். நான் கீழே இறங்கினேன். இப்பொழுது நான் கூறப்போகிறேன். நீர் இதைச் செய்வதற்கான ஏதோ ஒரு வழியுள்ளது. எனக்கு அது தெரியாது. ஒவ்வொன்றையும் அணுகுவதற்கு ஒரு மார்க்கம் உண்டு என்று நான் அறிவேன் என்றேன்.

நான் எனது கைகளை இவ்வாறு வைத்துக் கொண்டு, அன்புள்ள ஐயா, ஒரு க்ஷணப்பொழுது நீர் என்னிடம் வந்து பேச வேண்டுமென நான் வாஞ்சிக்கிறேன். நான் எவ்வளவு மோசமாயிருக்கிறேன் என்பதை உமக்கு கூற வேண்டுமென நான் விரும்புகிறேன். என் கைகளை இந்தவிதமாக வைத்துக் கொண்டேன். நான் செவிகொடுத்தேன். மக்கள் தேவன் தன்னோடு பேசியதாகக் கூறினர். அவர் பேசுகிறார் என்பதை நானும் அறிவேன், ஏனெனில், நான் சிறுவனாக இருந்தபோது, அவர் என்னிடம், மது குடிக்காதே, என்றெல்லாம் கூறியிருக்கிறார். அவர் இத்தடவை என் வேண்டுதலுக்கு பதிலளிக்கவில்லை.

ஒருவேளை நான் எனது கரங்களை இந்தவிதமாக வைத்துக் கொள்ள வேண்டுமோ? என்று எண்ணினேன். எனவே, நான் "அன்புள்ள ஐயா, சரியாக எவ்விதம் இதைச் செய்ய வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நீர் எனக்கு உதவி செய்வீர் என்று நான் நம்புகிறேன்" என்று எண்ணினேன்.

ஒவ்வொரு பிரசங்கியும் தங்களுடையதை வந்து சேர்ந்து கொள்ளுமாறும், எழுந்து நின்று, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதாகவும், இயேசு தேவ குமாரன் என்று விசுவாசிப் பதாகவும் அறிக்கையிட வேண்டுமென்று என்னிடம் கூறிக் கொண்டிருந்தனர். பிசாசுகளும் அவ்வாறே விசுவாசிக் கின்றனவே. எனவே நான் எனக்குள் இவ்வாறு சிந்தித்தேன். இதைவிட மேலான ஒன்றை நான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று, எனவே நான் இந்தவிதமாக வாஞ்சித்துக் காத்திருந்தேன்.

அலங்கார வாசலிலே, பேதுருவும், யோவானும் கடந்து செல்லுகையில், அங்கே தன் தாயின் வயிற்றிலிருந்து சப்பாணி யாய் பிறந்து வளர்ந்த ஒரு மனிதன் இருந்தான். அவர்கள் அவனிடம், “வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை...” என்று கூறினர். நான் அதைப் பெற் றிருக்கவில்லை என்று அறிந்திருந்தேன்.

எனவே, அதை எவ்வாறு செய்வது என்பதை கண்டு பிடிக்க முயன்று கொண்டிருந்தேன். எவ்வாறு ஜெபிப்பது என்பதை நான் அறியவில்லை. நான் என் கைகளை விரித்தேன், பிறகு, நான் இவ்வாறு கிடந்தேன். வாஸ்தவமாகவே, சாத்தான் அப்பொழுது காட்சியில் தோன்றினான். “நீ பார்த்தாயா? நீ அதிக நேரம் காத்திருந்து விட்டாய், நீ ஏற்கனவே இருபது வயதை அடைந்து விட்டாய். அதை இப்பொழுது முயற்சி செய்வதற்கு அவசியமில்லை. நீ செய்துவிட்டாய்...” என்று கூறினான்.

நான் அப்பொழுது மனமுடைந்து அழ ஆரம்பித்தேன். பிறகு, நான் என் இருதயம் உண்மையிலேயே உடைந்த போது, நான் இவ்வாறு கூறினேன், “நான் பேசப் போகிறேன். நீர் என்னிடம் பேசாவிடில், நான் எப்படியாயினும் உம்மிடம் பேசப் போகிறேன்.” எனவே நான் சொன்னேன், “நான் நல்லவனல்ல, நான் என்னைக் குறித்தே வெட்கப்படுகிறேன். திருவாளர் தேவனே, எங்கிருந்தோ நீர் என் பேச்சை கேட்கிறீர் என்பதை நான் அறிவேன். நான் பேசுவது உமக்குக் கேட்கிறதா? நான்



பொருந்திய ஸ்திரீ வருவாள், அவள் ஒரு வேளை ஜனாதிபதியாக இருக்கக்கூடும். அல்லது கத்தோலிக்க சபைக்கு எடுத்துக் காட்டாக அவள் இருக்கக் கூடும், அப்படியிருக்கும் என்று நான் கருதுகிறேன்; அவள் ஒரு நாளில் இந்நாட்டை தன் கையி லெடுத்துக் கொண்டு, இந்த தேசத்தை ஆட்சி செய்வாள். இந்நாடு ஸ்திரீயின் தேசமாக இருக்கிறது. கொடியானது ஒரு ஸ்திரீயினால் உண்டாக்கப்பட்டதாகும். அதில் பதின்மூன்று நட்சத்திரங்கள் உள்ளன. பதின்மூன்று கோடுகள் கொடியில் உள்ளன. பதிமூன்று காலனிகள் உள்ளன. எல்லாம் பதின்மூன்று, பதின்மூன்று, பதின்மூன்று என்று யாவற்றிலும் அவ்வாறே காணப்படுகிறது. அவளது வெள்ளி டாலர் நாணயத்திலும் பதின்மூன்று நட்சத்திரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. யாவும் பதின்மூன்று என்றே காணப்படுகிறது. இத்தேசத்தின் எண் பதின்மூன்றாகும். அது வெளிப்படுத்தின விசேஷத்தின் பதின்மூன்றாம் அதிகாரத்திலும் காணப்படுகிறது. முற்றிலும் பதின்மூன்று தான் யாவும், “ஸ்திரீ, ஸ்திரீ, ஸ்திரீ, ஸ்திரீ, ஸ்திரீ” என்றே இருக்கிறது. அவள் அனைத்து அலுவலகங்களையும் கைப்பற்றியிருக்கிறாள். ஹாலிவுட்டையும் அவள் தன் கையில் எடுத்துக் கொண்டுவிட்டாள். தேசத்தையும் மேற்கொண்டு விட்டாள். அலுவலகங்கள் அவளால் மேற்கொள்ளப்பட்டிருக் கின்றன. அங்கிருக்கின்ற யாவற்றையும் தன் அதிகாரத்தில் கொண்டு வந்திருக்கிறாள். மனிதனோடு அவள் சரிசமமான உரிமைகளை பெற்றுவிட்டாள், ஆண்களோடு வாக்களிக்கும் உரிமையும் கிடைத்துள்ளது. அவள் மனிதனைப் போலவே சபிக்கிறாள். ஆணைப்போலவே மது அருந்துகிறாள். இன்னும் என்னவெல்லாமோ செய்கிறாள். ஒரு ஸ்திரீயை தொழுது கொளவதற்காக கத்தோலிக்க சபையானது பயன்படுத்தும் ஒரு சரியான வஞ்சகமான கண்ணியாகும். எப்படியாயினும் அவர்கள் ஏற்கெனவே ஒரு ஸ்திரீயைத் தொழுது கொண்டுதானிருக்கி றார்கள்.

போன அரசியலின் கூட்டம் அது. அவ்வளவுதான் அது நிச்சயமாக!

தயயு செய்து இதைக் கூறுவதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள். இத்தேசத்திற்கு இரட்சிப்பே இல்லை. எந்த தேசத்திற்கும் இரட்சிப்பே இல்லை. இரட்சிப்பு இயேசு கிறிஸ்து வில் மட்டுமே உள்ளது. அவரில் மட்டும் உள்ளது. அது சரிதான்; நான் அமெரிக்காவுக்காக நன்றியுள்ளவனாயிருக்கிறேன்; உலகில் வேறு எந்த நாட்டில் வாழ்வதை விட இத்தேசத்தில் வாழ்வதையே நான் விரும்புகிறேன். ஏனெனில், கனடாவிற்கு வெளியே... கனடாவும், அமெரிக்காவும் இரட்டையர்கள். நாம் அதை அறிவோம், இருவரும் அண்டை நாடுகள், அற்புதமான நாடு அது. வேறு எங்கும் வாழ்வதை விட இங்கு தான் நான் வாழ விரும்புகிறேன். ஏனெனில் இது எனது தாய் நாடு. நான் ஒரு அமெரிக்கனாயிருப்பதற்காக மகிழச்சியுள்ளவனாயிருக்கிறேன். அதற்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன். ஆனால் நான் உங்களுக்கு கூறுவதென்னவெனில், இத்தேசமானது அதற்கு சமமான எழுப்புதலை அவசியம் பெற்று இருக்க வேண்டும். ஆனால் அது அதைப் பெற்றுக் கொள்ளாது. இல்லை, ஐயா, அவள் மீண்டும் எழும்பப் போகிறதில்லை. இல்லை அவள் முடிந்து போய்விட்டாள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக சிக்காகோவில் நான் கூறியது உங்களுக்கு நினைவிலிருக்கும். அது ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஜீன், உன்னிடத்தில் அது இருக்கிறது. "ஒன்று இந்த ஆண்டில் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும், தவறினால், அவர்கள் தொடர்ந்து அதை புறக்கணித்தே விடுவார்கள்" என்று நான் கூறினேன். அதைத்தான் அவர்கள் செய்து இருக்கிறார்கள். பாருங்கள் அவள் தன்னுடைய முடிவை எய்துகிற வரையிலும் அதையே தான் அவர்கள் செய்வார்கள்.

ஆனால் வல்லமை வாயந்த ஒரு ஸ்திரீ தோன்றுவாள். இப்பொழுது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இது ஒலிநாடாவிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு வல்லமை



என்னைப் பற்றியே வெட்கமடைகிறேன். உம்மை நான் அசட்டை செய்து விட்டேன் என்பதினால் நான் வெட்கமடைகிறேன்" என்று பேசினேன்.

ஏறக்குறைய அவ்வேளையில் நான் ஏறிட்டுப் பார்த்தேன். விசித்திரமான ஒரு உணர்வானது என்னைப் பற்றிக் கொண்டது. ஒரு ஒளியானது அவ்வறைக்குள்ளாக அசைந்து வந்து, ஒரு சிலுவையைப் போல் தோற்றத்தை உருவாக்கியது; என் வாழ்க்கை யிலேயே நான் கேட்டிராத ஒரு சப்தம் என்னோடு பேசியது. நான் அதை உற்று நோக்கினேன். முழுவதும் குளிர்ந்து போனதாக இருந்தது. நான் பயந்தேன், என்னால் அசைய முடியவில்லை. நின்று அதை உற்று நோக்கினேன். அது கடந்து சென்று விட்டது.

"ஐயா, உமது பாஷையை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. நீர் என்னுடைய மொழியில் பேசாவிடில் என்னால் உம்முடையதை புரிந்து கொள்ளவில்லை. நீர் என்னை மன்னித்தீரென்றால், சிலுவையில் என் கணக்குத் தீர்க்கப் பட்டிருக்க வேண்டும் என்று நான் அறிவேன். என் பாவங்கள் அங்கே சுமத்தப்பட்டிருக்கத்தான் வேண்டும். நீர் என்னை மன்னிப்பீரென்றால், திரும்ப வந்து என்னோடு உமது சொந்த பாஷையிலே பேசும். எனது பாஷையில் உம்மால் பேச இயலாவிடில் அதைக் கொண்டு நான் புரிந்து கொள்வேன். அது மீண்டும் திரும்ப வரச் செய்தருளும்" என்று நான் கேட்டேன்.

அது மீண்டும் தோன்றியது. ஓ, அது மிகவும் நன்றாயிருந்தது. அங்கேதான் என்னுடைய முற்றிலுமானதைப் பெற்றுக் கொண்டேன். ஆமென். ஆம், ஐயா. எனது தோள்களை விட்டு நாற்பது டன் எடையளவுக்கு பாரம் நீங்கினதாக உணர்ந்தேன். அங்கேயிருந்த மரநடைபாதையில் நடந்தேன். என்னால் நிலத்தைத் தொடக் கூட முடியவில்லை.

என் தாயார், "பில்லி, நீ உணர்ச்சிவசப்பட்டிருக்கிறாய்" என்றார்கள்.

"இல்லை, அம்மா, என்ன நேர்ந்ததோ எனக்குத் தெரியாது" என்றேன் நான்.

அங்கே பின்னால் ஒரு ரயில்பாதை உண்டாயிருந்தது. என்னால் இயன்ற அளவு உயரமாக அந்த ரயில் பாதையில் குதித்து ஓடினேன். எனது உணர்ச்சிகளை எவ்விதமாக வெளிப்படுத்துவது என்றே எனக்குத் தெரியவில்லை. எவ்வாறு ஆர்ப்பரிக்க வேண்டும் என்று எனக்கு மட்டும் தெரிந்திருந்தால் எப்படியிருக்கும். நான் ஆர்ப்பரித்தேன். ஆனால் நான் எனக்குத் தெரிந்த முறையில் அதைச் செய்தேன். நீங்கள் கவனித்தீர்களா?

அது என்னவாயிருந்தது – இளைப்பாறுதலின் துறை முகத்தில் என் ஆத்துமாவை நங்கூரமிட்டுக் கொண்டு விட்டேன். நான் அத்தோடு யாவும் சரிப்படுத்தப்பட்டது. அதுவே எனது முற்றிலுமானதாக இருந்தது. அங்கே நான் ஏதோ ஒரு கட்டுக் கதையையல்ல, ஏதோ சில கொள்கைகளையல்ல கண்டு கொண்டது. நான் அந்த மனிதனோடு பேசினேன். நான் சிறுவனாயிருந்த போது, நீ மது அருந்தக் கூடாது, புகைக்கக் கூடாது, ஸ்திரீகளினால் உன்னைக் கறைபடுத்திக் கொள்ளாதே என்றும், நீ பெரியவனாகும் போது, நீ எனக்காக செய்ய வேண்டிய வேலை ஒன்று இருக்கிறது என்று கூறினாரே அந்த மனிதனோடு பேசினேன். நான் அவரைத் தொடர்பு கொண்டேன். அவரேதான். ஆம் ஐயா, அவரே அந்த ஒருவர்.

முற்றிலுமானவர், டிசம்பர் 30, 1962, பத்தி எண் 262–283

# நான் அந்நிய பாஷையில் பேசினேன்

## *"I WAS SPEAKING IN TONGUES"*

என் கொட்டிலில் நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டேன். ஏறக்குறைய ஒரு ஆண்டு கழித்து – அப்படி ஏதோ ஒன்று – நான் அந்நிய பாஷையில் பேசினேன்.



வடிவமைக்கப்பட்டுள்ளன. "இறுதியாக அவர்கள் ஒரு மோட்டார் வாகனத்தைக் கண்டு பிடிப்பார்கள், அதற்கு ஸ்டியரிங் வீலும் இருக்காது. ஒரு குடும்பத்தினர் கண்ணாடியிலான மேல் மூடியையுடையதான அந்த அருமையான மோட்டார் வாகனத்தில் ஒரு பெரிய அழகாக காட்சியளிக்கும் சாலைகளில் பயணம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன். அவர்கள் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த பொழுது அவ்வாகனமானது யாராலும் ஓட்டிச் செல்லப்படாமல், தானாகவே இயங்கி அது சாலைகளின் வளைவுகளிலும் மற்றும் எவ்விடங் களிலும் சென்று கொண்டிருந்தது" என்று நான் கூறினேன். இப்பொழுது அவர்கள் அந்த மோட்டார் வாகனத்தை செய்திருக் கிறார்கள். ஏற்கனவே அதைக் கண்டுபிடித்துவிட்டார்கள். அவர்களிடம் இப்பொழுது அவ்வாகனம் இருக்கிறது. "விஞ்ஞான மானது அந்நாளில் முன்னேறி விடும்" என்று நான் அப்பொழுது கூறினேன்.

நான் மேலும் கூறினேன்: "அவர்கள் பெண்களுக்கு வாக்குரிமையை வழங்கிடுவதை நான் பார்த்தேன்" என்றேன். அவ்வாறே அவர்கள் பெண்கள் வாக்களிப்பதற்கும் அனுமதித்தும் விட்டார்கள். "அவ்வாறு வாக்களிப்பதன் மூலம் அவர்கள் இந் நாட்களில் ஒன்றில் தவறான மனிதனை தேர்ந்தெடுப்பார்கள்" என்று கூறினேன். கடந்த தேர்தலில் நீங்கள் அதைச் செய்திருக் கிறீர்கள். பெண்களின் வாக்குகள்தான் கென்னடியைத் தேர்ந் தெடுத்தது. நாம் அறிவோம். அங்கே அவர்கள் ஆயத்தப் படுத்தியிருந்த சூழ்ச்சியான இயந்திரங்கள், மற்றும் சில காரியங்களுக்கும் நடுவில் சில ஏற்பாடுகள் மூலமாக அதை சாதித்தார்கள். பெடரல் பீரோ ஆப் இன்வெஸ்டிகேஷன் அதை கண்டுபிடித்து அம்பலப்படுத்தியது. ஏன் அதைக் குறித்து ஏதும் செய்யமாட்டேனென்கிறார்கள்? ஏன் அதைக் குறித்து ஒன்றும் சொல்லமாட்டேனென்கிறார்கள்? தங்கள் வேலையை இழந்து விடுவோமோ என்ற அச்சத்தினால்தான். முழுவதும் அழுகிப்

கேட்டிருந்தீர்கள். முன் காலத்தவர்கள், சபையின் ஆரம்ப காலத்தில் இருந்தவர்கள், அதை அறிவார்கள். அவன் என்ன செய்வான் என்பதும், எல்லா 'இஸம்களும்' முடிந்து ருஷ்யாவில் போய் குவிந்துவிடும் என்று உரைக்கப்பட்டது.

"இந்த தேசம் ஜெர்மனியோடு யுத்தத்திற்குச் செல்லும்" என்று பிறகு நான் கூறினேன். "ஜெர்மனியானது அதன் எல்லையில் காங்க்ரீட் மதிலினால் அரணாக்கப்படும்" என்றும் கூறினேன். அதுதான் மேகினோட் லைன் என்ற சுவராகும். அது கட்டப்படுவதற்கு பதினொன்று ஆண்டுகளுக்கு முன்பே முன்னுரைக்கப்பட்டது. "அமெரிக்கர்கள் அந்த சுவரண்டை மிக மோசமான தோற்கடிப்பை அடைவார்கள்" என்றும் கூறினேன். இங்கேயுள்ள சில சகோதரர்கள் அங்கே அந்த காங்க்ரீட் சுவரண்டை இருந்திருக்கிறார்கள். சகோதரன் ராய் ராபர்ஸன் அவர்களும் மற்றும் ஏனையோரும் தான் அங்கே இருந்தார்கள். என்ன நடைபெற்றது என்பதை அவர்களிடம் கேட்டறிந்து கொள்ளுங்கள். அவ்வாறு தான் அமெரிக்கர்களுக்கும் நடந்தது. "ஆனால் முடிவாக நாம் ஜெயிப்போம், நமக்கும் ஜெர்மனிக்கும் இடையே நடைபெறும் யுத்தத்தில் ஜெயிப்பதில் நாமும் ஒருவராக இருப்போம்" என்று கூறினேன்.

"அந்தக் காலத்திற்கு பின்னர் விஞ்ஞானமானது மிகவும் முன்னேறிப்போய்விடும்" என்று உரைத்தேன். அவ்வாறே அது நடந்தது, அவர்கள் அணுகுண்டையும் இன்னபிறவற்றையும் செய்தார்கள். "அவர்களுடைய முன்னேற்றத்தின் கட்டத்தில் அவர்கள் முட்டை வடிவ மோட்டார் வாகனங்களைச் செய் வார்கள்" என்று உரைத்தேன். 1933இல் இருந்து அந்த பழைய காலத்து பெரிய மோட்டார் வாகனம், மடக்கிக் கொள்ளும் வசதியோடு துணியினால் மேல் மூடி உள்ளதாக இருந்தது. அதை நீங்கள் நினைவில் வைத்திருக்கிறீர்களா? அதன் பெரிய பின்பகுதியை கீழே இழுத்துக் கொள்ளலாம். பின்னால் உபரி டயர்கள் வைக்கப்பட்டிருக்கும். இப்பொழுது உள்ள வாகனங் களைப் பாருங்கள். அவைகள் முட்டை வடிவத்தில் இப்பொழுது



அதற்கும் ஓரிரண்டு ஆண்டு கழித்து, நான் ஒரு சபையில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன். நான் இப்படி மேடையின் மேல் நின்று கொண்டிருந்தேன்... அப்பொழுது நான் இளைஞனாயிருந்தேன், இப்பொழுது உள்ளதைப் போல் வயதாகியும் விரைப்பாயும் இல்லை. அப்பொழுது என்னால் சிறிது நன்றாக மேடையில் நடமாட முடியும். அக்காலத்தில் நான் பிரசங்கிக்கும் போது அதிக உணர்ச்சி வசப்படுவதுண்டு. அங்கு நின்று கொண்டு பிரசங்கித்துக் கொண்டிருக்கையில், ஒரு மேசையின் மேல் குதித்தேன். அது ஒரு பாப்டிஸ்ட் சபை, மில்டவுன் பாப்டிஸ்ட் சபை. நான் மிகவும் பலமாக பிரசங்கித்துக் கொண்டே உட்பாதைக்கு சென்றேன். நான் பிரசங்கத்தை நிறுத்தினவுடனே, ஏதோ ஒன்று என்னை ஆட்கொண்டது. நான் சில வார்த்தைகளை – நான்கு, ஐந்து, ஆறு வார்த்தைகளை – அந்நிய பாஷையில் பேசினேன். நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதை அறிந்து கொள்வதற்கு முன், "களைப்படையும் தேசத்தில் கன்மலை, புயலடிக்கும் நேரத்தில் ஒதுங்குமிடம்" என்று நான் கூறுவதை என்னால் கேட்க முடிந்தது. பாருங்கள்?

அதன் பிறகு ஒரு நாள் நான் ரயில் பாதையின் வழியாக, ஸ்காட்ஸ்பர்குக்கு இந்த பக்கமாக, ரோந்து வந்து கொண டிருந்தேன். அப்பொழுது காற்று பலமாக அடித்துக் கொண டிருந்தது. ஓ, என்னே, ரயில் பாதையின் மேல் பனிக்கட்டி படர்ந்திருந்தது. எனக்கு நியமிக்கப்பட்ட முப்பத்து மூன்றாயிரம் எண் நெடுஞ்சாலையில் நான் நடந்து செல்வதற்காக, நான் ரயில் பாதையைக் கடந்து மறுபுறம் சென்றேன். அறுபத்தாறு எண் கொண்ட நெடுஞ்சாலை மற்றொரு பக்கம் சென்றது. அது ஏறக்குறைய ரயில் பாதைக்கு இணையாக சென்றது. நான் பாதையின் வழியாக நடந்து சென்று கொண்டிருந்த போது சடுதியதாக... நான் பாடிக் கொண்டே தனிமையாக நடந்து சென்று கொண்டிருந்தேன். நான் எப்பொழுதும் பாடுவது வழக்கம். நான் ஜெபிக்க செல்ல எனக்கு வெவ்வேறு இடங்கள்

இருந்தன. நான் பாடிக் கொண்டே தனிமையாக நடந்து சென்று கொண்டிருந்த போது, திடீரென்று நான் அந்நிய பாஷையில் பேசுவதை உணர்ந்தேன், பாருங்கள், நான் என்ன செய்து கொண்டிருந்தேன் என்று எனக்கு தெரியவேயில்லை.

கேள்விகளும் பதில்களும் (COD 2:12), ஜனவரி 12, 1961, பத்தி எண் 103–105

# லவோதிக்கேயா சபை காலம் 1977-ல் முடியும் என்று முன்னறிவித்தல்

## *PREDICTS LAODICEAN AGE "WILL END BY 1977"*

கி.பி. 1906ல் லவோதிக்கேயா சபைக் காலமானது ஆரம்பித்தது என்று நாம் விசுவாசிக்கிறோம். நான் முன்னுரைக் கிறேன். இப்பொழுது நினைவில் கொள்ளுங்கள் ஒலிநாடாவில் செய்தியைக் கேட்கிறவர்களே! முன்னுரைக்கிறேன் என்ற வார்த்தையைக் கவனியுங்கள். அவ்வாறு நிச்சயம் நடக்கும் என்று நான் உரைக்கவில்லை; 1977 வாக்கில் அது முடியும் என்று நான் அனுமானித்து முன்னுரைக்கிறேன். 'ப்ரெடிக்ட்' (Predict) அப்பொழுது சபையானது முற்றிலும் விசுவாசத்துரோகத்திற்குள் போய்விடும். தேவனுடைய வாயினின்றும் அவள் வாந்திப் பண்ணிப் போடப்பட்டிருப்பாள் என்றும் முன்னுரைக்கிறேன். கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அல்லது எடுத்துக் கொள்ளப்படுதல் எந்த வேளையிலும் வரலாம். அவ்விஷயத்தில் நான் ஒரு ஆண்டு தவறவிட்டிருக்கக்கூடும். அல்லது ஒருவேளை இருபதாண்டுகள் தவறவிட்டிருப்பேன் அல்லது நான் அது நடப்பதைப் பற்றி நூறு ஆண்டுகள் கணக்குத் தவறுதலாக சொல்லிவிடக் கூடும். அது எங்கே எப்பொழுது நடக்கும் என்பதை நான் அறியேன். அவர் எனக்குக் காண்பித்த ஒரு தரிசனத்தின் அடிப்படையிலும், காலமானது முன்னேறிச் சென்று



கொண்டிருக்கிறதின் அடிப்படையிலும், அது 33க்கும் 77க்கும் இடையில் இருக்கலாம் என்று அனுமானத்தின் பேரில் முன்னுரைக்கிறேன். இந்த மகத்தான தேசமானது, ஒரு யுத்தத்திற்குச் சென்று அதினால் அது தூள் தூளாக நொறுங்கி விடும். அது மிகவும் சமீபமாக இருக்கிறது பயங்கரமான விதமாக சமீபமாயிருக்கிறது. நான் அனுமானத்தின் பேரில் தான் முன்னுரைக்கிறேன். எனவே நான் தவறாக இருக்கக்கூடும். புரிந்து கொண்டுள்ள ஒவ்வொருவரும் “ஆமென்” என்று கூறுங்கள். (சபையார், “ஆமென்” என்று கூறுகிறார்கள் – ஆசி). பாருங்கள்.

ஆனால் கர்த்தர் 1933ம் ஆண்டில், பெரிய வல்லமை படைத்த ஒரு ஸ்திரீயைக் குறித்து எனக்கு தரிசனத்தில் காண்பித்தார். அது எழுதி வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறு ரூஸ்வெல்ட் உலகம் யுத்தத்திற்கு செல்லும்படி செய்துவிடுவார் என்பதைப் பற்றியும் சொல்லப்பட்டது. எவ்வாறு முஸோலினி எத்தியோப்பியா தேசத்தின் மேல் தனது முதலாவது படையெடுப்பை எடுப்பான் என்பதும் அத்தேசத்தை அவன் கைப் பற்றுவான் என்பதும், ஆனால் அவன் அவமானகரமான முடிவை எய்துவான என்பதும் தரிசனத்தில் காண்பிக்கப்பட்டது. அதன் பிறகு, எவ்வாறு நாஜிக்கொள்கை, பாசிசக் கொள்கை, கம்யூனிசக் கொள்கை என்ற மூன்று விதமான இஸம்கள் தோன்றும் என்பதும், இவையெல்லாம் கம்யூனிஸத்தில் போய் முடிவடையும் என்பதும் காண்பிக்கப்பட்டது. அக்காலத்தில் எத்தனை பேர்கள் நான் பின்வரும் காரியத்தை நீங்கள் நின்று கொண்டு சப்தமாகக் கூறும்படி செய்ததை நினைவில் வைத்திருக்கிறீர்கள்? “ருஷ்யாவை கவனி, வடதிசை இராஜாவாகிய ருஷ்யாவைக் கவனி, வடதிசை இராஜாவாகிய ருஷ்யாவைக் கவனி, வடதிசை இராஜாவாகிய ருஷ்யாவைக் கவனி” என்று மீண்டும் மீண்டும் உங்களை கூற வைத்தேன். எத்தனை பேர்கள் நான் இவ்வாக்கியங்களை கைகளை அசைத்து மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்ப கூறியதைக்